பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 பங்குனி 31 ஞாயிற்றுக்கிழமை (13-04-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 137

# புலிகள் நிதி திரட்டுவதற்கு முற்றுப்புள்ளி வையுங்கள்!

## ‘உதயன்’ விடுமுறை

புதுவருடத்தை ஒட்டி நாளை ‘உதயன்’ ஊழியர்களுக்கு விடுமுறை நாளாகும். இதனால் நாளை மறுதினம் — செவ்வாய்க்கிழமையன்று — மட்டும் ‘உதயன்’ வெளிவரமாட்டான் என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம்.

-நிர்வாகத்தினர்-

## சர்வதேச சமூகத்திடம் ஸ்ரீலங்கா கோரிக்கை

ஜெனீவா, ஏப்ரல் 13

“சர்வதேச நாடுகளில் விடுதலைப் புலிகள் நிதி சேகரிக்கும் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கத் திட்டவட்டமான நடவடிக்கை எடுங்கள்.”

-- இவ்வாறு உலக நாடுகளையும் சர்வதேச சமூகத்தையும் கோரியிருக்கின்றது ஸ்ரீலங்கா அரசு.

சுவிட்ஸர்லாந்து ஜெனீவா நகரில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கூட்டத் தொடரில் உரையாற்றிய இலங்கைப் பிரதிநிதி பி. ஏ. டி. குணதிலக இக்கோரிக்கையை வெளியிட்டார்.

‘‘அனைத்துலக அளவில் நிதி திரட்டும் வாய்ப்பை புலிகள் இழந்தால் ஒழிய, ஆயுதங்களைக் கைவிட்டு, அரசாங்கத்தின் அமைதித் திட்டத்துக்கு செவிசாய்க்க வேண்டிய கட்டாயம் புலிகளுக்கு ஏற்படாது.

‘‘வெளிநாடுகளில் இருந்து புலிகளுக்குக் கிடைக்கும் நிதியுதவி நிறுத்தப்பட்டால் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு ஸ்ரீலங்கா அரசு சமர்ப்பித்துள்ள சமாதானத் திட்டத்தில் பங்குபற்றும்படி புலிகள் நிர்ப்பந்திக்கப்படு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அரசுத் தரப்பில் விளக்கம்:

## காணாமற் போன நபர்கள் புலிகளுடன் சேர்ந்திருக்கலாம்

### அல்லது அகதியாக இந்தியா சென்றிருக்கலாமாம்

கொழும்பு, ஏப். 13

‘‘வடக்கில் காணாமற் போயுள்ளோரின் எண்ணிக்கையை நிச்சயமாக இன்னது என்று கூறமுடியாது. காணாமற்போனவர்களில் சிலர் விடுதலைப் புலிகளுடன் சேர்ந்திருக்கலாம் அல்லது அகதிகளாக இந்தியாவுக்குச் சென்றிருக்கலாம்’’

ஸ்ரீலங்கா அரசுத் தரப்பில் பேசவல்ல ஒருவர் இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கின்றார் என பி. பி. ஸி. குறிப்பிட்டது.

வடக்கில் தமிழர்கள் காணாமற் போவது குறித்து ஜெனிவாவில் நடைபெறும் மனித உரிமைகளுக்கான ஐ. நா. ஆணைக்குழுக் கூட்டத்தில் காரசாரமான கண்டனங்கள் எழுந்துள்ள வேளையில், அரசுத்தரப்புப் பிரதிநிதி ஒருவரின் விளக்கத்தை பி. பி. ஸி. வெளியிட்டிருக்கின்றது.

‘‘ஆள்கள் காணாமற் போவது குறித்து விசாரணை நடத்துவதற்கு ஆணைக்குழு ஒன்றை அமைத்ததன் மூலம் இந்த விடயம் குறித்து அரசு விசேட கவனம் எடுத்துள்ளது.

‘‘மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பானவர்கள் எனக் காணப்படும் அனைவரும் தண்டிக்கப்படுவர். அத்தோடு இலங்கையில் மனித உரிமை மீறல்களின் எண்ணிக்கையும் குறைந்துள்ளது. நாட்டில் மனித உரிமை நிலையை மேம்படுத்த அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இலங்கையில் அரசுப்படைகளால் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து, ஐ. நாவின் மனித உரிமைகள் ஆணைக்குழுக் கூட்டத்தில் அமெரிக்க மனித உரிமை அமைப்பின் தலைவர் திருமதி லான்ஷி ரொபின் கடுமையாகச் சாடி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு வெடிப்பில் சிறுவன் உடல் சிதறிபலி!

### யாழ். நகரில் பரிதாப சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப். 13

யாழ்ப்பாணம் பிறவுண் வீதிப்பகுதியில் நேற்று முற்பகல் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றில் இரத்தின கோபால் ஜனனன் என்ற பன்னிரண்டு வயதுச் சிறுவன் உடல் சிதறிப் பலியானான்.

இனம் தெரியாத பொருள் ஒன்றை இந்தச் சிறுவன் கையாண்ட போது அது வெடித்திருக்கலாம் எனக் கருதப்பட்டது.

மீளக்குடியேறிய பின்னர், இதுவரை காலமும் வீட்டில் பாவிக்கப்படாமல் இருந்த அறையொன்றை வருடப் பிறப்பை ஒட்டி துப்புரவு செய்யும் வேலை நடைபெற்றதாகவும் —

அவ்வேலையில் கூட நின்று உதவி செய்த அச்சிறுவன், வீட்டுக்கு வெளியே வந்த சமயம் குண்டு வெடிக்கும் பெரிய சத்தம் கேட்டதாகவும் —

(8 ஆம் பக்கம் பார்க்க)

## விமானப்படைக்கு ஆயுதங்களை ஏற்றி வந்த கப்பலில் கொள்ளை!

### கொழும்புத் துறைமுகத்துக்கு வெளியே சம்பவம்

கொழும்பு, ஏப். 13

இலங்கை விமானப்படையினருக்கு ஆயுதங்கள் ஏற்றி வந்த ‘எம்.வி சான் சிங்கப்பூர்’ என்ற கப்பல் கொழும்பு துறைமுகத்துக்கு வெளியே நிறுத்தப்பட்டிருந்த சமயம் அக் கப்பல் கடற் கொள்ளையர்களால் கொள்ளையிடப்பட்டதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

இந்தக் கப்பலில் றொக்கட் லோஞ்சர்கள் மற்றும் வெடி மருந்து வகைகள் அடங்கிய 25 கொள்கலன்கள் இருந்தன என்றும் — அவற்றில் ஒரு கொள்கலன் கொள்ளையர்களால் உடைக்கப்பட்டிருந்தது என்றும் — பொலீஸார் தெரிவித்தனர்.

இக் கொள்கலனில் இருந்து ஆயுதங்கள் கொள்ளையிடப்பட்டனவா என்பது குறித்து பொலீஸாரும், விசேட புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கப்பல் கப்டன் உட்படப் பலர் விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளனர்.

இக் கொள்கலனில் இருந்த 700 பெட்டி ‘பிரண்டி’ மதுபான வகையே கொள்ளையிடப் பட்டிருப்பதாகத் துறைமுக அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இக் கொள்ளையருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு இருக்கலாம் என்ற கருத்தை சிரேஷ்ட பொலீஸ்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படை கண்காணிப்பு தீவிரம்

கொழும்பு, ஏப். 13

வடக்கு - கிழக்கு கடற் பிராந்தியத்தில் கடற்படையினரின் கண்காணிப்புப் பணி தீவிரப்படுத்தப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மீனவர்கள் என்ற போர்வையில் விடுதலைப் புலிகள் ஊடுருவித் தாக்குதல்களை நடத்தலாம் என்று தகவல் கிடைத்திருப்பதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-3)

## இன்று கப்பல் சேவை

யாழ்ப்பாணம், ஏப். 13

காங்கேசன் துறையில் இருந்து திருகோணமலைக்கு இன்று கப்பல் சேவை இடம் பெறும் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

சிவில் அலுவலகத்தில் பதிவு செய்தவர்களில் பட்டியல் இலக்கம் 560க்கு உட்பட்டவர்களை இன்று காலை 7 மணிக்கு யாழ். றயில் நிலையத்துக்கு வருமாறு கோரப் பட்டுள்ளது. (ஐ-3)

## நாச்சிக்குடாவில் விமானக் குண்டு வீச்சு!

### மூவர் பலி; அறுவர் காயம்

கொழும்பு, ஏப். 13

நாச்சிக்குடாப் பகுதியில் கடந்த வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இடம் பெற்ற விமானக் குண்டு வீச்சுத் தாக்குதலில் மூன்று அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இக்குண்டு வீச்சினால் மீனவரின் வலைகள் மற்றும் உபகரணங்கள் மற்றும் சில வீடுகளும், கிறிஸ்தவ தேவாலயம் ஒன்றும் சேதமடைந்தன.

இராமலிங்கம் தயாகரன் (14 வயது — நாச்சிக்குடா அந்தோனியார் ஆலயம்), சூசைநாதன் ஸ்ராலின் பேசரின் (30 வயது — இளையவன் குடியிருப்பு), காயத்திரி ஜேசுதாசன் (40 வயது— முழங்காவில் ஆயிரம் வீட்டுத் திட்டம்) ஆகியோரே உயிரிழந்தவர்களாவர்.

இச்சம்பவத்தில் 6 பேர் காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-150)

## புலிகளுடன் இரகசியப் பேச்சு லியம் பொக்ஸ் நடத்தவில்லை

### பிரிட்டிஷ் தூதரகம் மறுப்பு

கொழும்பு, ஏப். 13

பிரிட்டனின் வெளிவிவகாரத் துணை அமைச்சர் லியம் பொக்ஸுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே இரகசியப் பேச்சுக்களும் தொடர்புகளும் ஏற்பட்டுள்ளன என்ற சாரப்பட இலங்கை மற்றும் இந்தியப் பத்திரிகைகள் வெளியிட்டுள்ள செய்திகளை கொழும்பில் உள்ள பிரிட்டன் தூதரகம் நேற்று மறுத்தது.

துணை அமைச்சர் லியம் பொக்ஸ் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி உள்ளார் அல்லது அவர் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயம் பாரிஸில் உள்ள புலிகளின் பேச்சாளர் லோறன்ஸ் திலகர் வன்னிப்பிரதேசத்துக்கு மேற்கொண்டதாகக் கூறப்படும் விஜயத்துடன் ஏதாவதொரு விதத்தில் தொடர்புடையது எனக் கூறப்படுகின்

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## செல்லையா படைவீரசிங்கம்

(நுணாவில் சாவகச்சேரி)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் செல்வி சு. அருளானந்தம் அவர்களின் மைத்துனர்

**செல்லையா படைவீரசிங்கம் அவர்கள்**

08- 04- 97 இல் அகலா மரணமானார்.

இவரது பிரிவால் துயருறும் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும், அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும் செலுத்துகின்றோம்.

**பட்டப்பின் படிப்பு மாணவர்கள்,**
**கல்வியியற்துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

(46352)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 18 — 08 — 1912



உதிர்வு: 13 — 04 — 1996

## அமரர் சாமுவேல் செல்லையா

(இளைப்பாறிய பாடசாலை அதிபர்)

**13 - 04 - 1997**

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இன்று (13-4-97) பிற்பகல் 3 30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஞாபகார்த்த ஆராதனையிலும் உபசாரத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

21/2, ஈச்சமோட்டை,
யாழ்ப்பாணம்.

[46351]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி
## நல்லம்மா (சின்ராசு) விசுவலிங்கம்

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த மு. விசுவலிங்கம் அவர்களின் அன்பு மனைவி, நல்லம்மா (சின்ராசு) விசுவலிங்கம் அவர்கள் 09-04-97 இல் காலமானார்.

இவர் விஜயரூபி (சுவிஸ்), சிவலோகநாதன் (கனடா), இன்பராணி, திரவியம் (கனடா), சாந்தி (பிரான்ஸ்), கலாநிதி ஆகியோரின் அன்புத் தாயார் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிறு (13-04-97) காலை 9-00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இளங்காட்டு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
**மு. விசுவலிங்கம்**
(கணவர்)

உரும்பிராய்கிழக்கு. (46345)

## திருமதி
## K. S கணபதிப்பிள்ளை செல்லம்மா

கைதடி கிழக்கைச் சேர்ந்த திருமதிK S. கணபதிப்பிள்ளை செல்லம்மா வெள்ளிக்கிழமை (11 - 4 - 97) அன்று காலமாகிவிட்டார்.

இவர் K.S கணபதிப்பிள்ளை (இளைப்பாறிய அரச உத்தியோகத்தர், நிர்வாகி - சுகந்தன் அரிசி ஆலை, பரந்தன், வசந்தாஸ், - கைதடி, தனியார் எரிபொருள் விற்பனை நிலையம், கைதடி) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி உமாதேவி லோகநாதன் (செல்வமதி) அவர்களின் பாசமிகு தாயாரும், அ. லோகநாதன் (ஆசிரியர், யூனியன் கல்லூரி - தெல்லிப்பளை) அவர்களின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை (13- 04- 1997) காலை 10. 00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கைதடி ஊத்தல் மயானத்தில் தகனஞ் செய்யப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
**K. S கணபதிப்பிள்ளை.**

''செல்வபதி''
கைதடி கிழக்கு,
கைதடி.

(46335)

## சார்ஜன்ட் பலி

கொழும்பு, ஏப். 13

இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த சார்ஜன்ட் ஒருவர் நேற்று முன்தினம் மட்டக்களப்பு செங்கலடியில் விடுதலைப் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

எரிபொருள் நிரப்பும் நிலையம் ஒன்றில் அருகில் இச் சம்பவம் இடம்பெற்றது. (ஐ-5)

## பக்ஸ் இயங்கவில்லை

யாழ்ப்பாணம், ஏப். 13

யாழ். தொலைத் தொடர்புப் பணியகத்தில் பக்ஸ் செய்திகள் ஏற்றுக் கொள்ளப்படுவது நேற்று நிறுத்தப்பட்டிருந்தது.

'பக்ஸ்' இயந்திரம் சரிவர இயங்காத காரணத்தால் அதன் சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருப்பதாகவும் அதனைச் சீரமைத்ததும் 'பக்ஸ்' சேவை மீண்டும் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டது: (ஐ-173)

## பாரம்பரிய விளையாட்டுகள்

தென்மராட்சி, ஏப். 13

குடாநாட்டின் பல இடங்களில் இவ்வருடம் புத்தாண்டையொட்டிய விளையாட்டுப் போட்டிகளும் கலை நிகழ்வுகளும் நடைபெற்று வருகின்றன.

தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுக்களானபோர்த் தேங்காய் அடித்தல், தாச்சி போன்றவை இப் புத்தாண்டில் விசேட விளையாட்டுக்களாக இடம்பெறுகின்றன. (ஐ-117)

## ஊசி மருந்து தட்டுப்பாடு

தென்மராட்சி, ஏப். 13

அனலைதீவு ஆஸ்பத்திரியில் குழந்தைகளுக்கு ஏற்றப்படும் போலியோ தடுப்பு மருந்து, ஏற்புத்தடை மருந்து, விசர் நாய்க்கடி தடுப்பு மருந்து ஆகியன இல்லாததால் இப் பகுதி மக்கள் ஊர்காவற்றுறை, நயினாதீவு ஆஸ்பத்திரிகளுக்குச் செல்லவேண்டியுள்ளது.

(ஐ-117)

## மூளை மலேரியா மரணம்

சாவகச்சேரியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் மூளை மலேரியாக் காய்ச்சலினால் கடந்த வெள்ளியன்று மரணமானார்.

சாவகச்சேரி காளிகோயில் வீதியைச் சேர்ந்த இராமலிங்கம் சுந்தரலிங்கம் (வயது 55) என்பவரே மரணமானவராவார். (ஐ-117)

## இலங்கை வங்கி நாளை இயங்கும்

யாழ்ப்பாணம், ஏப். 13

புதுவருடக் கொடுக்கல் வாங்கல்களுக்காக யாழ். மாவட்டத்தில் உள்ள சகல இலங்கை வங்கிக் கிளைகளும் நாளை காலை 9-00 மணி முதல் 12-00 மணி வரை திறந்திருக்கும் என இலங்கை வங்கியின் யாழ். பிரதேச முகாமையாளர் அறிவித்துள்ளார். (உ)

## வீரதீர விளையாட்டுகள்

தென்மராட்சி, ஏப். 13

சாண்டோ சங்கரதாஸின் மாணவன் சாண்டோ வேலுப்பிள்ளையின் சாகஸ விளையாட்டுக்கள் நாளை திங்கட்கிழமை மிருசுவில் விடத்தற்பளையில் நடைபெறவுள்ளன.

பயணிகளை ஏற்றிய வான் ஒன்றை இழுத்துச்செல்லுதல், வேகமாக ஓடும் இரண்டு மோட்டார் சைக்கிள்களை இழுத்து நிறுத்துதல் போன்ற பல வீரமிகு விளையாட்டுக்கள் அங்கு இடம்பெறும்.

(ஐ-117)

### யாழ். ஆஸ்பத்திரியில்

## பிரேத அறையில் சடலங்களை காகங்கள் கொத்தும் நிலை!

யாழ்ப்பாணம், ஏப். 13

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பிரேத அறையின் சீர்கேடான நிலையால் அங்கே வைக்கப்படும் சடலங்களைக் காகங்கள் கொத்தும் நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளின் போது சேதமடைந்த யாழ். ஆஸ்பத்திரிக் கட்டடங்களில் அதன் பிரேத அறையும் ஒன்றாகும்.

தற்போது ஆஸ்பத்திரிக் கட்டடங்களில் சேதமடைந்த பகுதிகள் பல திருத்தியமைக்கப்பட்டு வருகின்றன. எனினும் பிரேத அறை மாத்திரம் இன்னும் திருத்தியமைக்கப்படாத நிலையிலேயே உள்ளது.

பிரேத அறையின் ஜன்னல் கண்ணாடிகள் மாத்திரமே உடைந்து சேதமடைந்துள்ளன.

இதனால் திறந்த வெளியாகக் காணப்படும் இந்த ஜன்னல் பகுதிகள் ஊடாகக் காகங்கள் உட்புகுந்து சடலங்களைக் கொத்தி அசிங்கப்படுத்துவதாக ஆஸ்பத்திரி வட்டாரத்தில் தெரிவிக்கப்படுசிறது. (உ)

### உள்ளூராட்சிச் சபைத் தலைவர்கள்

## பதவியேற்பு நிகழ்வை ஐ. தே. க. பகிஷ்கரிக்கும்

கொழும்பு, ஏப். 13

அண்மையில் நடந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் உள்ளூராட்சிச் சபைத் தலைவர்கள், உப - தலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டோரின் பதவி ஏற்பு நிகழ்வு இம்மாதம் 15 ஆம் திகதி நடைபெறும் என அரசாங்கம் அறிவித்துள்ள போதும்-

ஐ. தே. க. சார்பில் தெரிவு செய்யப்பட்ட தலைவர்கள், உப- தலைவர்கள் அன்றைய தினத்தில் பதவியேற்காமல் பகிஷ்கரிப்புப் போராட்டம் ஒன்றை நடத்துவர்.

தேர்தலில் நடந்ததாகக் கூறப்படும் மோசடி, குளறுபடி ஆகியவற்றை அம்பலப்படுத்தும் நோக்குடன் அன்றைய நிகழ்வை பகிஷ்கரிப்பதாக ஐ. தே. க. அறிவித்துள்ளது.

ஐ. தே. க. கைப்பற்றியுள்ள உள்ளூராட்சிச் சபைகளின் பதவியேற்பு வைபவங்கள் அன்றைய தினத்துக்கு முன்பு அல்லது பின்பு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3-150)


உ

கல்வயல் - பெருங்குளம்
அருள்மிகு
அம்பலவாண வீரகத்தி விநாயகர்
ஆலய
மகோற்சவ விழா விஞ்ஞாபனம்
1997

| | | | | |
|---|---|---|---|---|
| கொடியேற்றம்: | 13-04-97 | ஞாயிறு | மு.ப. | 11-00 மணி |
| தேர்த்திருவிழா: | 21-04-97 | திங்கள் | மு.ப. | 9-00 மணி |
| தீர்த்தத்திருவிழா: | 22-04-97 | செவ்வாய் | மு.ப. | 10-30மணி |
| பூங்காவனத்திருவிழா: | 23-04-97 | புதன் | பி.ப. | 4-00 மணி |

மகோற்சவ விழாக்கள் ஆலய குரு
புன்னாலைக்கட்டுவன்
சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள்
தலைமையில் நடைபெறும்.

அடியார்கள் அனைவரும் விநாயகப்பெருமானைத் தரிசித்து திருவருளைப் பெறுமாறு வேண்டுவதுடன், புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

— நன்றி —

விளம்பர அன்பளிப்பு:

அருள்முருகன் நகையகம், 96/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சாரங்கா நகைமாடம், 177/4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

கிளை: சிவா நகையகம், கண்டி வீதி, சாவகச்சேரி.

(46353)


## சாவகச்சேரி இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க
# வருடாந்தப் பொதுக் கூட்டம்

**காலம்: 19-04-1997 சனிக்கிழமை முற்பகல் 10. 00 மணி.**

**இடம்: கல்லூரி அருணாசலம் மண்டபம்.**

அனைத்து பழைய மாணவர்களையும் அங்கத்துவம் பெற்று கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**க. சந்திரசேகரா,** தலைவர்,

**டாக்டர் சு. சி. அருளானந்தம்.** செயலாளர்.

**கல்லூரி பழைய மாணவர் சங்கம்**

2-4-97 (சி/499)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# புதிய கூட்டணி அரசை அமைக்க காங்கிரஸ் தலைவர்கள் ஆராய்வு

## ஐக்கிய முன்னணியின் உதவியைகோருகின்றனர்

இந்தியாவில் 10 மாத காலம் நீடித்த தேவகௌடா தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவி இழந்ததைத் தொடர்ந்து புதிய அரசாங்கம் ஒன்றை கூட்டாக அமைப்பது குறித்து காங்கிரஸ் கட்சி ஆராய்ந்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

புதிய கூட்டணி ஒன்றை அமைப்பது தொடர்பாக ஐக்கிய முன்னணி அங்கத்தவர்களுடன் தொடர்புகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று காங்கிரஸ் கட்சியின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் மத்தியில் ஐக்கிய முன்னணி மீண்டும் புதிய அரசு ஒன்றை அமைக்க முடியும் என்றும்—

அந்த அரசுக்கு காங்கிரஸின் ஆதரவைப் பெறுவதற்கு புதிய தலைவர் ஒருவரை ஐக்கிய முன்னணி அரசு தெரிவு செய்ய வேண்டும் என்றும் காங்கிரஸ் தலைவர் சீதாராம் கேசரி நேற்று யோசனை தெரிவித்தார்.

நேற்றுக்காலை புதுடில்லியில் சீதாம்ராம் கேசரியின் இல்லத்தில் காங்கிரஸ் கட்சி எம். பிக்களும், எம். எல். ஏக்களும் கலந்து கொண்ட சாதாரண முறையிலான ஒரு கூட்டத்தில் சீதாராம் கேசரி இந்த யோசனையைத் தெரிவித்தார்.

மத்தியில் மீண்டும் கூட்டரசாங்கம் அமைக்கப்படும் பட்சத்தில் அந்த கூட்டரசாங்கத்துக்கு காங்கிரஸ் கட்சி தலைமை வகிக்க வேண்டும் என்ற எண்ணம் காங்கிரஸுக்குக் கிடையாது என்று காங்கிரஸின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் புதிய வருடத்துக்கான வரவு செலவுத் திட்டத்தை நாடாளுமன்றம் அங்கீகரிக்கும் என்று அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இம்மாதம் 21 ஆம் திகதி ஆரம்பமாகும் நாடாளுமன்றத்தில் 3 நாள் கூட்டத் தொடரின்போது அரசியல் வேறுபாடுகளைக் கைவிட்டு வரவு செலவுத் திட்டத்தை அங்கீகரிப்பதென முக்கியமான கட்சிகள் தீர்மானித்துள்ளன. (இ-4)

## சூரியனில் இருந்து காந்தக் கதிர்

லண்டன், ஏப்.13

கடந்த புதனன்று சூரியனில் இருந்து பூமியை நோக்கி வெடித்த ஒருவித காந்த சக்தி கொண்ட மேகத்திலுள்ள கதிர் வீச்சினால் பூமியின் துணைக்கோள் தொடர்பு மற்றும் மின்சக்தி அமைப்புக்கள் பாதிக்கப்படக் கூடும் என வானியல் விஞ்ஞானிகள் அஞ்சுகின்றனர்.

இக் கதிர் வீச்சுகள் மணிக்கு 24 லட்சம் கி. மீ. வேகத்தில் பயணம் செய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-10)

## அங்கோலாவின் புதிய அரசுக்கு உலக நாடுகள் பாராட்டு

லுவாண்டா, ஏப். 13

அங்கோலாவில் நேற்று முன்தினம் பதவியேற்ற புதிய அரசாங்கத்துக்கு சர்வதேச நாடுகள் பாராட்டுத் தெரிவித்துள்ளன.

அமைதி, ஜனநாயகம், மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கான பாதை தற்போது திறக்கப்பட்டுள்ளதாக ஐ.நா. பாதுகாப்புச் சபை தெரிவித்துள்ளது.

பல்லாண்டு காலமாக இரத்தம் சிந்தப்பட்டு வந்ததை முடிவுக்கு கொண்டுவரும் மைல்கல் இது என்று அமெரிக்க உள்துறை அமைச்சர் திருமதி மெலடின் அல்பிறையிட் கூறியுள்ளார்.

19 ஆண்டு கால உள்நாட்டுப் போருக்கு பிறகு இதுவே அங்கோலாவின் முதல் அதிகாரப் பகிர்வு அரசாங்கம் ஆகும். (இ-4)

## மேற்கு நாடுகளின் தூதுவர்கள் ஈரானிலிருந்து திருப்பி அழைப்பு

தெஹ்ரான், ஏப். 13

ஈரானில் இருந்து மேற்கு நாடுகள் தமது தூதுவர்களை திருப்பி அழைக்கத் தொடங்கியுள்ளன.

நான்கு அதிருப்தியாளர்களின் படுகொலைக்கு ஈரான் அரசு உத்தரவிட்டதாக ஜேர்மன் நீதிமன்றம் தீர்ப்பளித்ததே இதற்குக் காரணம் ஆகும்.

இதற்கிடையில் நாடுகடந்த நிலையில் ஜேர்மனியில் வாழ்ந்து வந்த குர்டிஷ் மக்களை கொலைசெய்ய உத்தரவிட்டது ஈரான்தான் என்று ஜேர்மன் நீதிமன்றம் குற்றச்சாட்டுகளை எழுப்பியிருப்பதால் ஈரானில் உள்ள ஜேர்மன் நிலையங்கள் பாதிக்கப்பட இருக்கின்றன என்று ஈரான் எச்சரிக்கை விடுத்திருக்கிறது. (இ-4)

## சீனாவில் நில நடுக்கம்

சீனாவின் வடமேற்குப் பிராந்தியத்தில் நேற்று முன்தினம் ஏற்பட்ட நில நடுக்கத்தில் குறைந்தது 9 பேர் இறந்தனர்; 39 பேர் காயமடைந்தனர்.

இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து சீனாவில் ஏற்பட்ட 6 ஆவது நில நடுக்கம் இது வாகும்என்று நில நடுக்க ஆய்வு அலுவலகம் கூறுகிறது. (இ-4)

### உலக அரங்கில்

## சரஜீவோவில் பாப்பரசர்

திருத்தந்தை 2 ஆம் அருள். சின்னப்பர் ஐரோப்பாவின் ஜெருஸலேம் என அழைக்கப்படும் சரஜீவோ நகருக்கு விஜயம் செய்தார்.

யுத்தத்தாலும் இனப்பிளவுகளாலும் சிதைந்துள்ள சரஜீவோ நகரின் சமாதான ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப அழைக்கும் குரலாக திருத்தந்தையின் இந்த விஜயம் அமைகிறது.

இந்தப் பயணம் 2 ஆம் அருள். சின்னப்பர் திருத்தந்தையாகப் பதவி ஏற்ற பின் மேற்கொள்ளும் 75 ஆவது திருப்பயணமாக அமைகின்றது. (ஐ-10)

## வேலை நிறுத்தம் காரணமாக உள்ளூர் விமானப் போக்குவரத்து இந்தியாவில் முழுஅளவில் பாதிப்பு

புதுடில்லி, ஏப். 13

இந்தியாவில் விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டாளர்கள் நடத்திய வேலை நிறுத்தம் காரணமாக உள்ளூர் விமானப் போக்குவரத்துக்கள் தடைப்பட்டன.

இந்திய பொதுமக்களின் மொத்த விமானப் போக்குவரத்தில் அரைப் பங்கைக் கையாளும் பம்பாய் நகரின் இரு முக்கிய விமான நிலையங்களிலும் —

புதுடில்லி விமான நிலையத்திலும் — விமானப்புறப்பாடுகளும், விமான வருகைகளும் பாதிக்கப்பட்டன என்று அறிவிக்கப்படுகிறது.

இம்மாத ஆரம்பத்தில் புதுடில்லி விமான நிலையத்தில் விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டு அதிகாரி ஒருவர் வேலையில் இருந்து இடை நிறுத்தி வைக்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கு முகமாகவே இந்த வேலை நிறுத்தம் இடம் பெற்றது.

அந்த அதிகாரி மீதான இடை நிறுத்த உத்தரவு வாபஸ் பெறப்பட்டு இதர கோரிக்கைகளும் நிறைவேற்றப்படும்வரை இந்த வேலை நிறுத்தம் தொடரும் என்று தொழிற்சங்க ஊழியர் ஒருவர் தெரிவித்தார். (இ-4)

## அல்பேனியாவுக்கு பன்னாட்டுப்படைகள்

### ஆயத்த வேலையில் இத்தாலிய படை

அல்பேனியாவில், மனிதாபிமான உதவிகளை மேற்பார்வை செய்ய வரவிருக்கும் பன்னாட்டுப் படைகளின் வருகைக்கு ஆயத்தம் செய்யும் முகமாக, இத்தாலியப் படைகளின் ஒரு பிரிவு அங்கு இறங்கி உள்ளது.

சுமார் 20 இத்தாலியப் போர் வீரர்கள் அல்பேனியாவின் தனஸ் துறைமுகத்தில் இயந்திரத் துப்பாக்கிகளோடும் இராணுவ வாகனங்களோடும் வந்து இறங்கி இருக்கிறார்கள்.

அதன் பின்னர் சொற்ப நேரத்தில் தலைநகர் ரிரானாவில் இத்தாலிய இராணுவப் போக்குவரத்து விமானம் ஒன்று வந்து இறங்கியது.

சுமார் 60 ஆயிரம் பேர் கொண்ட பன்னாட்டுப்படைப் பிரிவொன்று நாளை திங்கட்கிழமை தொடக்கம் வந்திறங்கவிருக்கிறது. (இ-4)

## 4 இராணுவ அதிகாரிகள் கைது

புலனாய்வுத் துறையைச் சேர்ந்த பெண் ஏஜெண்ட் ஒருவரை பத்திரிகைகளுக்கு தகவல் வழங்கியதாகக் குற்றஞ் சாட்டி சித்திரவதைக்குள்ளாக்கிய நான்கு இராணுவ அதிகாரிகளை பெரு நாட்டுப் பொலீஸார் கைது செய்துள்ளனர். (இ)

## அதி நவீன சண்டை விமானம்

நியூயோர்க், ஏப். 13

ஒலியைவிட இருமடங்கு வேகத்துடன் செல்லும் 'ஸ்டெல்த்' என்னும் அதி சக்தி வாய்ந்த சண்டை விமானம் ஒன்றை அமெரிக்கா உருவாக்கியுள்ளது.

ராடர்களுக்கும், மின் இயக்கத்துக்கும் தென்படாமல் எதிரி இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கும் சக்தி கொண்டது இந்த விமானம்.

இரு இறக்கைகளையும் ஓர் ஆசனத்தையும் கொண்ட இந்த இலகுரக விமானம் ஒன்றின் விலை 7 கோடி அமெரிக்க டொலர்களாகும். (ஐ)

# தமிழீழ ஆதரவாளர் - எதிர்ப்பாளர் மோதும் அரசியல் நிலை தமிழகத்தில்

## நெடுமாறன் எச்சரிக்கை

சென்னை, ஏப். 13

''தமிழ் நாட்டில் தமிழீழப் போராட்டத்துக்கு ஆதரவானவர்களும், அப்போராட்டத்துக்கு எதிரானவர்களும் நேருக்கு நேர் மோதும் நிலை உருவாகும்.''

இப்படி தமிழர் தேசிய பாதுகாப்பு மன்றத் தலைவர் பழ. நெடுமாறன் எச்சரித்துள்ளார்.

சென்னிமலையில் அண்மையில் நடந்த ஈழத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

தமிழ் நாட்டில் இருமுகாம்கள் உருவாகின்றன. ஒன்று, தமிழீழப் போராட்டத்துக்கு ஆதரவான முகாம். மற்றது, தமிழீழப் போராட்டத்துக்கு எதிரான முகாம்.

இவ்விரண்டும் நேருக்கு நேர் மோதும் நிலை விரைவில் உருவாகும்.

''விடுதலைப் புலிகளுக்கு தாம் ஆதரவில்லை. ஈழத் தமிழர்களுக்கே தாம் ஆதரவு'' என்று தமிழக முதலமைச்சர் கருணாநிதி கூறி வருகிறார்.

விடுதலைப்புலிகளும், ஈழத் தமிழர்களும் ஒன்று தான். இருதரப்பையும் பிரிக்க முடியாது என்பதை அவருக்கு கூறி வைக்க விரும்புகிறோம்.

இப்படி அவர் மேலும் கூறினார்.

மாநாட்டையடுத்து அங்கு உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

மறுமலர்ச்சி தி.மு.க. பொதுச் செயலாளர் கோபாலசாமி உண்ணாவிரதத்தை முடித்து வைத்து உரையாற்றினார். (இ-3-150)

## சங்கத்தில் பங்கீட்டுக்கு 5 கிலோ சீனி

யாழ்ப்பாணம், ஏப். 13

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் பங்கீட்டு அட்டைக்கு 5 கிலோ சீனியை வழங்கி வருகிறது.

ஒரு கிலோ 33 ரூபா வீதம் சீனி பாவனையாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. (இ-173)

## கோப்பாயில் கஷ்ட நிலையிலுள்ள குடும்பங்களுக்கு தையல் இயந்திரம்

யாழ்ப்பாணம், ஏப். 13

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கஷ்ட நிலையிலுள்ள குடும்பங்களுக்கு தையல் இயந்திரம் வழங்கும் வைபவம் கடந்த புதன் கிழமை முற்பகல் 10.30மணியளவில் சமூக சேவை உத்தியோகத்தர் க. இராசலிங்கம் தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராக பிரதேச செயலர் க. கேதீஸ்வரன், சிறப்பு விருந்தினராக நிர்வாக உத்தியோகத்தர் வ. வல்லிபுரம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் பிரதேச செயலர் க. கேதீஸ்வரன் உரையாற்றுகையில், இப் பிரிவில் கஷ்ட நிலையிலுள்ள பெண்கள் தலைமைதாங்கும் 33 குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் —

அவர்களிற்கு முதற்கட்டமாக 10 பேருக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்படுவதாகவும்—

இந்த இயந்திரங்கள் சுகாதார நெடுஞ்சாலைகள் சமூகசேவை அமைச்சால் புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்றன என்றும் — தெரிவித்தார்.

இத் தையல் இயந்திரங்கள் மூலம் இக் குடும்பங்கள் சுய தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளமுடியுமென்றும் அதன் மூலம் அவர்களது குடும்ப வருமானத்தை பெருக்கிக் கொள்ள முடியுமென்றும் அவர் மேலும் கூறினார்.

கிராம அபிவிருத்தி அமைச்சால் நீர்வேலியில் நடத்தப்படுகின்ற தையல் பயிற்சி நிலையத்தில் இத் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்ட பத்து பேருக்கும் ஏற்கனவே பயிற்சி வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும் ஆரம்பம்

வட்டுக்கோட்டையில்

## சிவாஸ் ஸ்ருடியோ

மீண்டும் தனது சேவையை 14-04-1997 முதல் ஆரம்பிக்கவுள்ளது.

★ சிறந்த முறையில் விடியோ பிடித்துக்கொள்ளவும்
★ கலர் - கறுப்பு வெள்ளை புகைப்படங்கள் பிடித்திடவும்.
★ விசேட அடையாள அட்டைகள் மற்றும் படங்கள் பெரிதாக்கிக்கொள்ளவும் (12×10)

சிறந்த ஸ்தாபனம்

**சிவாஸ் ஸ்ருடியோ**

கிளை:

பிரதான வீதி, சித்தன் கேணி.

சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை.

(46242)


# புத்தாண்டு பிரசுரம்

சுழிபுரம், ஏப். 13

சுழிபுரம் - பறாளை முருகன் சங்காபிஷேக சபையினர் ஈசுர வருஷப் பிறப்பு சுபகரும நிகழ்வு புத்தாண்டு பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளனர். (இ-28)

# புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகள்

வடமராட்சி, ஏப். 13

நெல்லியடி சன சமூக நிலையம் நடத்தும் புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகள் நாளை 14 ஆம் திகதி நெல்லியடி முருகமூர்த்தி ஆலய முன்றலில் இடம் பெறும்.

இப்போட்டிகளுக்கு கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன், கரவெட்டி கோட்ட பிரதிக்கல்விப்பணிப்பாளர் வி. செல்வராசா ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள். (இ-173)

# பம்பாய் வெங்காய விதை

அராலி, ஏப். 13

அராலி பம்பாய் வெங்காய உற்பத்தியாளர்களுக்கு தேவையான பம்பாய் வெங்காய விதை யாழ். மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளரால் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்டு தொல்புரம் கமநலசேவை நிலையத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

தேவையான விவசாயிகள், விவசாயிகள் சம்மேளனத்தில் பதிவு செய்து இதனைக் கொள்வனவு செய்ய முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-112)

# மோட்டார் சைக்கிளிலிருந்து விழுந்து காயம்

யாழ்ப்பாணம், ஏப் .13

ஓடிக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்தவர் தவறி விழுந்து காயமடைந்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன் தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில் பருத்தித்துறையைச் சேர்ந்த யோகநாதன் ராகினி (வயது42) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார், (இ-15)

# வங்கிகளில் விசேட ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 13

தமிழ்-சிங்கள புத்தாண்டுதினமான நாளை திங்கட்கிழமை குடாநாட்டிலுள்ள இலங்கை வங்கி, மக்கள்வங்கி, தேசிய சேமிப்பு வங்கிக்கிளைகளில் விசேட பணக் கொடுக்கல் வாங்கல்களுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (இ-173)

# சங்கீத சபை பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஏப். 13

வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைகள் எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறவுள்ளன.

இப் பரீட்சைகளுக்கான யாழ். மாவட்டப் பரீட்சார்த்திகளின் அனுமதி அட்டைகளும், நேர சூசியும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாதவர்கள் தங்கள் பகுதி தபாலகங்களில் நேரில் சென்று அவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று பரீட்சைக் குழுவின் செயலாளர் தெரிவித்தார். (ஐ)


யாழ்ப்பாணம் - கல்வியங்காடு

அருள்மிகு

## ஸ்ரீபத்திரகாளி சமேத ஸ்ரீவீரபத்திரர் சுவாமி தேவஸ்தானம்

## மஹோற்சவம் - 1997

1997ஆம் ஆண்டு பங்குனித் திங்கள் 31ஆம் நாள் **(13 - 04 - 1997)** ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.06 மணிக்கு கொடியேற்றவிழாவுடன் மஹோற்சவம் ஆரம்பமாகி சித்திரைத் திங்கள் 12ஆம் நாள் **(25 - 04 - 1997)** வெள்ளிக்கிழமை வைரவர் உற்சவத்துடன் பூர்த்திபெறும்.

மஹோற்சவக் குருக்கள்:

**சிவஸ்ரீ. பொ. வரதராஜக்குருக்கள்** அவர்கள்

(வீரபத்திர தேவஸ்தான பிரதமகுரு - கல்வியங்காடு)

கொடியேற்றம் 13-04-97 ஞாயிறு மு. ப. 9.06 மணி
தேர்த்திருவிழா 21-04-97 திங்கள் மு. ப. 9.02 மணி
தீர்த்த திருவிழா 22-04-97 செவ்வாய் மு ப. 9.30 மணி
பூங்காவனம் 23-04-97 புதன் பி. ப. 1.30 மணி

அடியார்கள் அனைவரும் வருகை தந்து எம்பெருமானின் அருள்பெற்று பெருவாழ்வு வாழ்கவென வேண்டுகின்றோம்.

**ஆலய பரிபாலனசபை**

கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

(46324)



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 13 — 12 — 1940

மறைவு: 25 — 04 — 1996

## சண்முகம் முத்துக்குமார்

திதி: 13 — 04 — 1997

இடம் பெயர்ந்து சென்று மீண்டு வழிவருகையிலே
உங்கள் உயிரை
காலனவன் காவு கொண்டு போனானோ?
நம்பமுடிய வில்லையப்பா!
நோயோடு இருந்திருந்தால் குணப்படுத்தி
மகிழ்ந்திருப்போம்
பாயோடு படுத்திருந்தால் பக்குவமாய்
பார்த்திருப்போம்
நோயோடும் இல்லாமல் பாயோடுமில்லாமல்
பாதையிலே உங்கள் உயிர் போனதென்ன
மாயமப்பா!
உங்கள் பூ முகத்தைப் பார்க்காமல்
பொன் மொழியைக் கேட்காமல் ஆண்டொன்று
ஆனதப்பா!
உங்களது செய்திகேட்டு கடலுக்கு அப்பாலே
கலங்கி நிற்கும் கண்மணிகள்
தேற்றுவார் யாருமின்றித் தேம்பியே நிற்கின்றனர்
ஒன்றல்ல ஆண்டு ஆயிரமாய் ஆனாலும்
அகலுமோ உங்கள் நினைவலைகள்
எங்கள் நெஞ்சமதை விட்டகலுமோ?

**மனைவி, பிள்ளைகள், மருமகன்.**

பாடசாலை வீதி,
ஆறுகால் மடம்,
ஆனைக்கோட்டை.

(46275)



குருவே துணை

உயர்திரு வே. முருகேசு சுவாமி

அவர்களின்

## 1 ஆம் மாத குருபூசை

**13 - 04 - 97**

மேற்படி சுவாமி அவர்களின் 1 ஆம் மாத குருபூசை, இன்று செல்வச்சந்நிதி முருகனின் அபிஷேக ஆராதனையுடன் ஆரம்பமாகி, சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் மகேஸ்வர பூசையுடன் நிறைவுறும். சுவாமி அவர்களின் அன்பர்கள் அடியார்கள் கலந்து குருபூசையைச் சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

பா. பாலகிருஷ்ணன் குடும்பம்.
அல்வாய்.

(சி-496)



## ஓராண்டு நினைவஞ்சலி

**கனகசுந்தரம் பார்வதி**

பால் நிலவில் அமுதூட்டி மகிழ்ந்ததாயம்மா!
பார்வதியே எண்மரைப் பெற்றாய் அம்மா!
சீர்கொண்டு வாழ எமைப் பெற்ற தெய்வமே!
சீர்தூக்கிப் பார்க்கிறோம் நெஞ்சினிலே நீ.

சாந்தி! சாந்தி! சாந்தி!

க. திருநாவுக்கரசு,
(மகன்)
மருத்துவபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

கருங்காலி,
காரைநகர்.

(46336)



## தந்தையின் ஓராண்டு நினைவு முகம்



**அமரர் முருகேசு பாலசிங்கம்**

பெற்றதாய் மடியில்: **1942—06—19**

உற்றதாய் அடியில்: **1996—03—25**

சந்தம் புளியடி - காரைநகர்

திதி: **1997—04—13**

**தாயுடன் வாழும் தந்தை**

எங்களின் தெய்வமே! எம்மைப் பிரிந்தீர்களே
பொங்குதே நெஞ்சம் பூகம்பம் போலிங்கு
உங்களை இழந்தே ஓராண்டு சென்றதப்பா!
மங்கிடாப் புகழைத் தந்தே மறைந்தீர்களே!
நம்பவே முடியவில்லை நாங்கள் துடிக்கின்றோம்
ஐம்பத்திநாலு வயதில் உங்களை பிரிந்ததாலே
வெம்புதே நெஞ்சம் வெளிச்சத்தை இழந்ததாலே
அம்பிகையுடன் வாழும் எங்களின் தந்தையே!
அஞ்சலித்தே பணிந்தே வாழ்கின்றோம் அப்பா!

● 1997-04-13 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆண்டுத்திவச ஆத்ம சாந்தி வைபவத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**அன்பு மனைவி, பிள்ளைகள், மருமகன், பேரன், சகோதரர்கள்.**
**ஆசிரியர் திரு. எம். பி. அருளானந்தன்** (மகன்)

இல. 120/4 திருவள்ளுவர் ஒழுங்கை,
அரசடி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(சி/ 482)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அராலிப் பாலம் வரையான

# உப்பு நீர் தடுப்பு அணையை திருத்துவதற்கு நடவடிக்கை

## அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் உதவும்

அராலி, ஏப். 13

பொன்னாலைப் பாலம் தொடக்கம் அராலிப்பாலம் வரையான உப்புநீர் தடுப்பு அணையின் திருத்த வேலைகள் அகதிகளுக்கான ஐ.நா. உயர் தூதரகத்தால் அப்பகுதி விவசாயிகளின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட உள்ளன.

இந்த அணை அழிந்துள்ளதால் பல நூற்றுக்கணக்கான ஹெக்ரேயர் வயற்காணிகள் பாதிக்கப்பட்டு வருவதுடன் வரட்சிக்காலங்களில் குடி தண்ணீர்க் கிணறுகள் உப்புத் தன்மை அடைகின்றன.

வலி.மேற்கு பிரதேச செயலாளர் கா. சந்திரராசா இதனை அகதிகளுக்கான ஐ. நா உயர் தூதரகத்தின் கவனத்துக்கு கொண்டு வந்ததை அடுத்தே அதன் உதவி கிடைக்க உள்ளது.

5கிலோ மீற்றர் நீளம் கொண்ட மேற்படி அணையை மீள அமைப்பதற்கு அகதிகளுக்கான ஐ நா. உயர் தூதரகம் யம் நிதியை வழங்க முன்வந்துள்ளது.

மேலும் இப்பகுதியில் வாழும் வசதி குறைந்த கிராம மக்கள் குடி தண்ணீர் பெறும் 16 கிணறுகளையும், 11 குழாய்க் கிணறுகளையும் புனரமைப்பதற்கும் 6 புதிய கிணறுகளை அமைத்துக் கொள்வதற்கும் தேவையான நிதியையும் மேற்படி நிறுவனம் வழங்கும்.

பாதிக்கப்பட்ட பாலர் பாடசாலை கட்டடங்களை புனரமைத்து தேவையான தளபாட வசதிகளும் வழங்கப்பட உள்ளன.

### மின்சார விநியோகம் பாதிப்பு

யாழ். வேம்படியில் உள்ள ஜெனரேற்றரின் ''பாகம்'' ஒன்று பழுதடைந்தகாரணத்தினால் அந்த ஜெனரேற்றர் மூலம் மின்சாரம் வழங்கப்படும் பகுதிகளுக்கான மின் விநியோகம் கடந்த இரு வாரங்களாக தடைப்பட்டுள்ளது.

இதேபோன்று, முன்பும் ஒரு தடவை ஜெனரேற்றர் பழுதடைந்தபோது கொழும்பிலிருந்து ஜெனரேற்றருக்கான 'பாகம்' கொண்டு வரப்பட்டு ஜெனரேற்றர் திருத்தப்பட்டது என்றும்—

எனினும், அவ்வாறு கொண்டு வரப்பட்ட 'பாகம்' பொருத்தமானதாக இருக்கவில்லை என்றும்—

இதனாலேயே, மீண்டும் ஜெனரேற்றர் பழுதடைந்திருக்கலாம் எனக் கருதப்பட்டதால் ஜெனரேற்றருக்கான அதே பாகத்தினை கொள்வனவு செய்வதற்காக இலங்கை மின்சாரசபை அதிகாரி ஒருவர் கொழும்பு சென்றுள்ளார் என்றும்—

இலங்கை மின்சாரசபையின் பிரதி பொது முகாமையாளர் இராஜேந்திரன் தெரிவித்தார்.

இதே வேளை தற்காலிக ஏற்பாடாக மேற்படி பழுதடைந்த பாகத்தை சுன்னாகத்தில் இருந்து கொண்டு வந்து ஜெனரேற்றரைத் திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளதாகவும் அவர்கூறினார். (இ-5)

### கோரிக்கை

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் மீண்டும் ''பல்வைத்தியப் பிரிவு'' செயற்பட வேண்டும் என கோரிக்கை விடப்பட்டுள்ளது.

மந்திகை ஆதாரவைத்திய சாலைக்கும் கோப்பாய் அரசினர் வைத்தியசாலைக்கும் இடையில் அமைந்துள்ள அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் பல்வைத்தியப் பிரிவு செயற்படாமையால் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என்று கூறப்படுகின்றது. (இ-11)

## யாழ். - பண்டத்தரிப்பு பஸ்சேவை: ஆரம்பிக்குமாறு கோரிக்கை

பிரயாணிகளின் நலன்கருதி யாழ். - பண்டத்தரிப்பு பஸ் சேவை நடத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை விடப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பிலும் அதனையடுத்துள்ள சில்லாலை, வடலியடைப்பு, மாதகல், பிரான்பற்று ஆகிய இடங்களிலும் பெரும் எண்ணிக்கையான மக்கள் மீளக்குடியேறி வருவதால் போக்குவரத்துக்கு மிகவும் கஷ்டப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையிடம் பஸ்களுக்கு பற்றாக்குறை நிலவுவதால் தனியார் மினிபஸ் உரிமையாளர்கள் இப் பாதையில் மீண்டும் சேவையை ஆரம்பிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (இ-135)

## யாழ். - பருத்தித்துறை வீதி திருத்தும் வேலை இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஏப். 13

மோசமாக பழுதடைந்துள்ள யாழ்ப்பாணம் — பருத்தித்துறை வீதித் திருத்த வேலைகள் கடந்த ஒருவார காலமாக நிறுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் — பருத்தித்துறை பிரதான வீதி திருத்த வேலைகள் அண்மைக்காலமாக மிகத்துரிதமாக நடைபெற்று வந்தன.

பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான இவ்வீதியால் சிறுப்பிட்டி வரை வீதி திருத்தப் பட்டது. அதற்கு அப்பால் நீர்வேலி, கோப்பாய், இருபாலைப் பகுதிகளில் இந்த வீதி திருத்தப்படாது இடைநடுவில் விடப்பட்டுள்ளது.

நீர்வேலி, கோப்பாய், இருபாலை ஆகிய இடங்களில் உள்ள இப்பிரதான வீதி மிக மோசமாகப் பழுதடைந்துள்ளது.

இதே நேரம் ஆவரங்காலில் இவ் வீதி திருத்தப்பட்ட போதிலும், சிவன் கோயிலுக்கு சற்று சமீபமாக உள்ள மதகில் பாரிய ஓட்டை ஒன்று உள்ளது. இவ்விடத்தில் வீதி திருத்தப்பட்ட போது அம் மதகில் உள்ள ஓட்டை மூடி திருத்தப்படவில்லை.

இதனால் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் செல்வோர் விபத்துக்குள்ளாக நேரிடுகிறது. (இ-173)

உ
சிவமயம்

16 ஆவது ஆண்டு குருபூசை வழிபாடு



நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குருமுதல்வர்
முதலாவது குருமகா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக
ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்

ஈழமணித் திருநாட்டில் சைவமும் தமிழும் ஓங்க தன் வாழ்வை அர்ப்பணித்து, ஆதீனம் தோற்றுவித்த அருள் ஞான விளக்காம், எங்கள் குருமுதல்வர் திருவடி வணங்குவோம்.

அடியார்கள்.

(சி/495)

## சத்திரசிகிச்சைக்கு 40 பேர் தெரிவு

யாழ்ப்பாணம், ஏப். 13

கண்விழிப்படல வளர்ச்சியால் பார்வை குறைந்தோரை சத்திர சிகிச்சைக்கு உட்படுத்துவதற்கான கோப்பாய் லயன்ஸ் கழகத்தினால் கண்பரிசோதனை முகாம் நடத்தப்பட்ட போது விழிப்படல சத்திர சிகிச்சைக்கென உடனடியாக 40 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

இம் முகாமின் போது கண் பரிசோதனையை யாழ். போதனா வைத்திய சாலையைச் சேர்ந்த பிரபல கண் சத்திரசிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ். குகதாசன் மேற்கொண்டார்.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இம்முகாமில் 55 வயதுக்கு மேற்பட்ட சுமார் 300 பேர் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

சத்திரசிகிச்சைக்குத் தெரிவு செய்யப்பட்ட 40 பேருக்குமான கண்ணுக்கு பொருத்தும் வில்லைகளையும் கோப்பாய் லயன்ஸ் கழகம் இலவசமாக கொடுத்து உதவ முன்வந்துள்ளது. (இ-173)

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
பழைய மாணவர் சங்கம்
ஆண்டுப் பொதுக்கூட்டம்

இடம்:- கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
காலம்:- 20 - 04 - 97 பி. ப 2. 30
(ஞாயிற்றுக்கிழமை புதிய நேரம்)
தலைவர்: திரு. ந. சிவகடாட்சம் (அதிபர்)
பிரதம விருந்தினர்: திருமதி G. N. சற்குணசிங்கம்
(முகாமையாளர் - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

அனைத்து பழைய மாணவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர் (ஆயுள்கால அங்கத்தவர்-ரூபா 100, வருட சந்தா ரூ.10. அங்கத்தவர் களாகச்சேராதவர்கள் தயவு செய்து அங்கத்தவராகச் சேரும் வண்ணம் கேட்டுக் கொள்கிறோம்)

எஸ். கே. தங்கவடிவேல்
செயலாளர்

(46349)

இடம் மாற்றம்

SAMUEL, SONS & CO. LTD.
Engineers, Constructors
Manufacturers, Merchants
Head Office: 164 Messenger
Street, Colombo.

இலக்கம் 17, செம்மணி வீதி, நல்லூரில் இயங்கி வந்த எமது தொழிற்சாலை, வாடிக்கையாளர்களின் நலன் கருதி
இல. 206, 208 ஆஸ்பத்திரி வீதியில்,
(பஸ் நிலையத்திற்கு முன்பாக, ஹற்றன் நாஷனல் வங்கிக்கு அருகாமையில்) இயங்குகின்றது.

எமது ஸ்தாபனத்திற்குவேறு எந்தப் பெயரிலும் யாழ்ப்பாணத்தில் கிளைகள் இல்லை என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

மேடைத் தராசும், சகல அளவு கருவிகள் (அரச அங்கீகாரம் பெற்றவர்கள்), மின்சார நீர் இறைக்கும் இயந்திரம், நீர் இறைக்கும் இயந்திரம் என்பன உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும்.

முகாமையாளர்.
யாழ். கிளை

[9511]

52 ஆம் அகவையில்...

மலர்வு: 13 — 04 — 1945



உதிர்வு: 10 — 07 — 1995

அமரர் க. நாராயணசிங்கம்
(உரிமையாளர், ஸ்ருடியோ நித்ய சித்ரா, சங்கானை)

சனிமுகத்தின் நினைவினிலே
கண்பனிக்க நிற்கின்றோம்
பனிபோலும் குளிர்பார்வை
இனி என்று காண்போமோ?
உமை மட்டும் ஏன்பறித்தான்?
வாழ்வெல்லாம் உம் நினைவில்
வாழ்வதன்றி வேறறியோம்.
இந் நாளில் உம்பிறப்பை
இதயத்தில் நினைக்கின்றோம்.

- குடும்பத்தினர்

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

(9496)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கண்ணாடி -லாச்சிகளுடன் இணைந்த பேர்மா (Burma) தேக்கு அலுமாரி (Tall boy) விற்பனைக்குண்டு. தேவை யானோர் பின்வரும் முகவ யில் தொடர்பு கொள்ளவும். 121, Chapel Street, Jaffna. [46342]

நல்ல நிலையில் உள்ள நாய்க்கூடு விற்பனைக்குண்டு. முகவரி; I. K நடேசன் நந் தினி நந்தவனம்'' 15, மலர் மகள் வீதி, அரியாலை. [46343]

### இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழி (புறொ யிலர்) மொத்தமாகவும்,சில்ல றையாகவும் விற்பனைக்கு உண்டு. 1kg 150/-, இல. 86, கோயில்வீதி, யாழ்ப்பாணம். (சி/ 474)

புறொயிலர் (Broiler) இறைச்சிக் கோழி விற்ப னைக்குண்டு. தொடர்பு:- 141, கோயில் வீதி, யாழ்ப் பாணம். [46340]

இறைச்சிக் கோழி (புறொ யிலர்) மொத்தமாகவும்,சில் லறையாகவும் விற்பனைக் குண்டு. வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் (வ.உ) வட்டு. கிழக்கு சித்தன் கேணி. [46341]

இறைச்சிக்கோழி விற் பனைக்குண்டு. சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். மொத்த மாகவும் சில்லறை யாகவும் கிடைக்கும். தொடர்பு: Lucky Farm Sales Centre, Palaly Road, Thirunelvely. (9510)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. 1 Kg 150/-,வாடிக்கையாளர் களுக்கு விசேட கழிவு வழங் கப்படும். இல. 101 இலுப்பை யடிச்சந்தி அருகாமை,பலாலி றோட், கந்தர்மடம், யாழ்ப் பாணம். (46313)

### தேவை

''பிள்ளைகள் இல்லம்'' சங்கரப்பிள்ளை வீதி, மானிப் பாய் - Matron (மேற்றன்) பிள்ளைகள் பராமரிக்க சகோதரிகள், தேவை. நேரில் உடன் விண்ணப்பிக்கவும். [9505]

கோடியல், மற்றும் திருகு மூடியுடன் ஜாம் போத்தல் கள் தேவை. தொடர்பு கொள்ளும் முகவரி; ரேஸ்ற் லைன் இன்டஸ்றீஸ் (தனி) லிமிட், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. [46331]

### மணமக்கள் தேவை

ஆஸ்திரேலியாவுக்கு அழைக்கக்கூடிய 36, வயதுப் பெண்ணுக்கும், ஜேர்மனி நோர்வேக்கு வெளிநாட்டி லுள்ள பெண்களுக்கும் ஸ்பொன்சரில் வெளிநாடு, செல்ல விரும்பும் பெண்களுக் கும். மணமக்கள் தேவை. தொடர்பு: முத்துக்குமாரு செல்லப்பா புன்னாலைக்கட் டுவன், தெற்கு. [46326]

### தவறிவிட்டன

வேலுப்பிள்ளை செங்கா தேவி என்பவருடைய இல. 637412914V தேசிய அடை யாள அட்டையும், விசேட அடையாள அட்டையும், மானிப்பாய் மருதடி ஆலயத் தில் தவறிவிட்டன. கண் டெடுத்தவர்கள். ஆலயத்தில் அல்லது, அடையாள அட்டையிலுள்ள விலாசத் துக்கு தயவு செய்து அனுப்பி வைக்கவும். [46337]

இளையதம்பி மகேஸ்வரி என்ற பெயருடைய அடை யாள அட்டை யாழ்ப்பாண நகரில் தவறிவிட்டது. கண் டெடுத்தவர்கள்T.சொக்கலிங் கம் இல. 2, சிவப்பிரகாசம் றோட், வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம் என்ற முக வரியில் ஒப்படைத்து உதவ வும். [46333]

### மணப்பெண்கள் தேவை

இங்கிலாந்து பிரஜாவுரிமை பெற்ற இந்து கௌரவ குடும் பத்தைச் சேர்ந்த செவ்வாய்க் குற்றமற்ற 39 (திருவாதிரை) 37 (ரேவதி) வயதுடையவர் களுக்கு தகுந்த மணப்பெண் கள் தேவை. இலங்கை வந்து திருமணம் செய்து அழைத் துச் செல்வார்கள். தொடர்பு:- 122, சிவன் கோயில் வீதி, திருநெல்வேலி மேற்கு. (9500)

### மணப்பெண் தேவை

அரச உயர் பதவியிருந்து ஓய்வு பெற்ற பிரபல நூலா சிரியருக்கு, கொழும்பில் அல் லது யாழ்ப்பாணத்தில் சொந்த வீடு வசதியுள்ள, 40 வயதுக்குட்பட்ட, நல் லொழுக்கமும், கல்வியறிவு முள்ள, இந்து சமய மண மகள் தேவை. முதற்கடிதத்தி லேயே சகல விவரங்களும் தெரிவிக்க வேண்டும். உடன் தொடர்பு:- மே/பா இல.606. (46316)

### கணிதம் 97

ஆரம்ப அறிவேயில்லாத வர்களுக்கும்,இதுவரை சித்தி யடையாதவர்களுக்கும், தவணை அலகுகளில் குறைந்த புள்ளிகளைப் பெற் றவர்களுக்கும் 31 வருட அனுபவமுடைய ஆசிரியரி னால் 40 மணித்தியாலங் களில் Distinction பெறு பேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக் குளி. (46188)

### இசை வகுப்புகள்

புதிய இசை வகுப்புகள் ஓர்கன், கிற்றார், புல்லாங் குழல், வீணை, வயலின் மெலோடிக்கா ஆரம்பம்: 14-4-97. நேரம்:- 12-00 — 1-00 P. M தொடர்பு:- செல்வி வாசுகி ரங்கன் நியூ வீணா கானம், 16/2 கச் சேரி நல்லூர் வீதி, யாழ்ப் பாணம். (46294)

---

யாழ். அத்தியடி

## பிள்ளையார் கோயில்

## தேர் உற்சவம்

14-04-97 திங்கட்கிழமை (புதுவருடப்பிறப்பு தினம்)

**வசந்த மண்டப பூசை** காலை:- 8.30 மணி

**தேர் உற்சவம்** காலை:- 9,15 மணி

ஆலய நிர்வாக சபை.

(சி/494)

---

உ

தேவிதுணை

அருள் மிகு

## ஸ்ரீ மஹாமாரி அம்மன் தேவஸ்தானம்

(பண்டாரி அம்மன் கோயில்)

தம்பசிட்டி - பருத்தித்துறை

**ஈசுர வருட பொங்கல், மடை, குளிர்த்தி உற்சவம்**

**14 - 04 - 97** திங்கள் மாலை 6 மணி விசேட பூசை அம்பாள் வீதி வலம் வருதல்

**15 - 04 - 97** செவ்வாய் காலை 9 மணி பொங்கல், மடை, விசேட அபிஷேகமும், குளிர்த்தியும்

''சித்தாந்த சாகரம் ஸ்ரீலஸ்ரீ அழகு ஜெகதீஸ்வர தேசிகர் (இந்து மறு மலர்ச்சி ஆதீனம்) அவர்களின் விசேட சொற்பொழிவு நடைபெறும்.

கவனிப்பு:-

நேர்த்திக்கடன், காவடி, பால்செம்பு, கரகம், மற்றும் நேர்த்திக்கடன் செய்ய விரும்பும் அடியார்கள் 14 - 04 - 97 திங்கள் மாலை 6 மணிக்கு முன்னரும் மறு நாள் செவ்வாய் முற் பகல் 10 மணிக்கு முன்ன ரும் தங்கள் நேர்த்திக்கடன்களை நிறைவு செய்து அம்பாள் அருள் பிரசாதம் பெற்றுய்யும் வண்ணம் வேண்டப்படுகின்றனர்.

இங்ஙனம்

**ஸ்ரீலஸ்ரீ சி. சபாரத்தினதேசிகர்**

அம்பிகை அருள் வழி நடக்கும்

ஷ ஆலய பிரதமகுருவும், ஆதீனதர்மகர்த்தாவும்.

(46259)

---

# நினைவஞ்சலி

| செல்வி | டாக்டர் | திருமதி |
|---|---|---|
| ப. இராமநாதன் | சி.வேலாயுதன் | ப.வேலாயுதன் |
| (ஓய்வு பெற்ற அதிபர்) இந்து மகளிர் கல்லூரி யாழ்ப்பாணம்) | (கண் வைத்திய நிபுணர்) | |
| தோற்றம்; 24 - 06 - 26 | 04 - 10 - 25 | 14 - 10 - 30 |
| மறைவு: 05 - 04 - 87 | 31 - 10 - 91 | 16 - 06 - 92 |

திதி: 13 - 04 - 97

இடர்கள் பல வந்த போதும் இடைவழியில் சலிப்படையாது பாசத்தோடு அரவணைத்தவர்களை நெஞ்சம் மறப்பதில்லை.

சகோதரி.

126/4 அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

(46208)

---

# இதய அஞ்சலி



## அமரர் அப்பச்சி மகாலிங்கம்

15 - 03 - 97 இல் அமரத்துவம் அடைந்த முன் னாள் தலைமை ஆசிரியரும், எழுத்தாளருமான திரு. அப்பச்சி மகாலிங்கம் நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோயில் பரிபாலன சபையின் தலைவராக, காரிய தரிசியாக, தனாதிகாரியாக; நவாலி முருகானந்தா சனசமூக நிலையத்தின் ஸ்தாபகர்களில் ஒருவராக, தலைவராக, செயலாளராக, போஷகராக பதவிகள் வகித்து அரும்பணி ஆற்றிய பெருந்தகையாளன். அவ் வினிய சேவையாளன் - கலைஞனின் ஆத்மா சாந்தி யடைய அந்திரான் அழகனை இறைஞ்சுகின்றோம்.

நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோயில்
பரிபாலன சபை
நவாலி முருகானந்தா சனசமூக நிலையம்.

நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(46338)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

(13 - 04 - 97)



## திருமதி நாகேஸ்வரி நடராசா

(தங்காள்)

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 22 — 03 — 1927 | 14 — 03 — 1997 |

எங்கள் குடும்ப ஒளிவிளக்கே அம்மா!
நீங்கள் எமக்கீந்த உயர்ந்த வாழ்வு
நீங்கள் செலுத்திய நிறைந்த அன்பு
எங்களுக்காய் வாழ்ந்த எளிய வாழ்வு
எங்களோடு வாழ்ந்த இனிய நாள்கள்
இடையில் ஏற்பட்ட எதிர்பாரா இழப்பு
எம்மால் என்றுமே மறக்க முடியாதவை.

உங்கள்ஆத்மாசாந்தியடையப்பிரார்த்திக்கிறோம்,

அம்மாவின் மறைவு கேட்டு எமது துயரில் பங்கு கொண்டு உதவி புரிந்தோருக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

செருக்கல் லேன்,
டச்சு றோட்,
சாவகச்சேரி.

(46321)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## நல்ல பெயர் வாங்க...

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராகப் பெரும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதாகக் குறிப்பிட்டு அவற்றுக்கு, ஆட்சேபம் தெரிவிக்கும் கடிதம் ஒன்றை சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்திருப்பதாகச்செய்திகள் வெளியாகியுள்ளன.

அதேசமயம் —

ஜெனிவாவில் தற்போது நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரிலும் இலங்கை அரசும், அரசுப் படைகளும் கண்டனத்துக்கு உள்ளாகியிருக்கின்றன.

குடாநாடு இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் வந்த பின்னர் எழுநூறு பேர் வரை காணாமற் போயிருப்பது குறித்து இந்தக் கூட்டத் தொடரில் அமெரிக்க மனித உரிமைகள் தூதுக்குழு உட்பட பலபிரதிநிதிக் குழுக்கள் சுட்டிக் காட்டிக் கவலைக் வெளியிட்டிருக்கின்றன.

மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் படையினரை சட்டத்தின் முன் நிறுத்தி, கடும் நடவடிக்கை எடுக்கும் விடயத்தில் இலங்கை அரசு பின்னிற்பதாகவும் அந்தப் பிரதிநிதிகள் குற்றஞ்சுமத்தியிருக்கின்றார்கள்.

பாரிய இராணுவ நடவடிக்கை வேளையில்—பெரும் மோதல்கள் நடைபெறும் போது — அப்பாவிப் பொது மக்கள் இடையில் சிக்கி உயிரிழப்பதையோ அல்லது படுகாயமடைவதையோ தவிர்ப்பது கஷ்டமாக இருக்கலாம் அல்லது அதனை நியாயப்படுத்தலாம்.

ஆனால் ஒரு தாக்குதல் சம்பந்தப்பட்ட விசாரணைக்கென—பழிவாங்கலாக— பொது மக்கள் கைது செய்யப்படுவதையோ அல்லது அதன் பின்னர் காணாமற் போவதையோ நியாயப் படுத்த முடியாது. அதுபோல படையினரின் கட்டுப்பாட்டுக்குள் யாழ். குடாநாடு வந்த பின்னர் — ஒன்று, இரண்டல்ல; ஒரு சில டசின்கள் அல்ல— சுமார் எழுநூறு பேர் வரை அடையாளம் தெரியாமல் காணாமற் போயிருப்பதை — மாயமாக மறைந்திருப்பதை — சிறிய விடயமாக ஒதுக்கி விட முடியாது.

''நீதி நிலை நாட்டப்படுவது மாத்திரம் அல்ல; நிலை நாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்'' — என்பது பெயர் பெற்ற நீதித்துறை வாசகம். அதனைச் சற்று மாற்றிக் கூறுவது இங்கு பொருத்தமானது.

''நீதி நிலைநாட்டப்படுவதாகக் காட்டப்படுவது மாத்திரமன்றி உண்மையில் நீதி நிலைநாட்டப்படவும் வேண்டும்.''

இத்தகைய மனித உரிமை மீறல் சம்பவங்கள் இடம் பெறாத — மக்கள் மாயமாய் மறையும் பதற்ற நிலை இல்லாத— பயப் பிராந்தியற்ற— சட்டம், ஒழுங்கு பேணப்படுகின்ற — அமைதி நிலையை உருவாக்குவதற்கு அரசு ஆக்கபூர்வமான செயற்பாடுகளை வகுத்துச் செயற்பட வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலமே அரசு தனக்குள்ள கெட்ட பெயரை நீக்கி, சர்வதேச மட்டத்திலும், தமிழர்கள் மத்தியிலும் நல்ல பெயர் வாங்க முடியும். அரசு இது விடயத்தில் உள்ளார்ந்தமான அக்கறை காட்ட வேண்டும் எனத் தமிழ் மக்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப். 13

வட்டுக்கோட்டை அடைக்கலந்தோட்டம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை11.00மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 25 ஆம் திகதி நிறைவு பெறுகின்றது. தேர்த் திருவிழா 21 ஆம் திகதியும் தீர்த்தோற்சவம் 22 ஆம் திகதியும் இடம் பெறும். (இ)

★ ★ ★

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் கோயில் இரதோற்சவம் புத்தாண்டு தினமான நாளை காலை 9 மணிக்கு நடைபெறவிருக்கிறது. நாளை மறுதினம் காலை இடம் பெறும் தீர்த்தத் திருவிழாவுடன் மஹோற்சவம் நிறைவு பெறும். (ஐ)

★ ★ ★

ஏழாலை தெற்கு களபாவோடை வசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தானத்தில் புதுவருடத்தை ஒட்டி நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிமுதல் விசேட பூசைகள் இடம் பெறவுள்ளன. (ஐ)

★ ★ ★

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தசாமி கோயில் ''ஸகஸ்ர மஹா சங்காபிஷேகம்'' நாளை திங்கட்கிழமை புதுவருடப் பிறப்பன்று நடைபெறும்.

ஸகஸ்ர மஹாசங்காபிஷேகத்தை அடுத்து பிற்பகல் விசேட உற்சவமும் இடம் பெறும் (இ-11)

★ ★ ★

சப்பச்சி மாவடி அருள் மிகு நாவலடிப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் புதுவருடத்தினமான திங்கள் விசேடநிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன. பிற்பகல் 2 மணி தொடக்கம் பிரார்த்தனைப்பாடல்களும், பஜனைப்பாடல்களும், இடம் பெறுவதுடன் இந்து இளைஞர் ஒன்றியத்தின் தலைவர் தனபாலன் புதுவருடச் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (இ-31)

★ ★ ★

ஆனைக்கோட்டை உயரப்புலம் கூத்துங்க விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் இன்று 13 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

21 ஆம் திகதி ரதோற்சவமும் மறுநாள் 22 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (இ-100)

★ ★ ★

அல்வாய் சாமணந்தறைப் பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர் வரும் 23ஆம் திகதி சித்திரா பௌர்ணமி தினத்தன்று நடைபெறும் தீர்த்தோற்சவத்துடன் வருடாந்த மஹோற்சவம் நிறைவுறும். (இ-173)

★ ★ ★

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் ரதோற்சவ விழா திங்கட்கிழமை பகல் 11மணிக்கு நடைபெற உள்ளது.

அன்றையதினம் காலை 9மணிக்கு ஸ்ரீ பஞ்சமுக விநாயகருக்கு விசேட தீபாராதனை, வசந்தமண்டப பூசை ஆகியவற்றை தொடர்ந்து 11 மணிக்கு ரதோற்சவம் இடம்பெறும்.

அதேசமயம் ஈசுர வருடப் பிறப்பு சங்கிராந்தி பூசை இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (இ-152)

★ ★ ★

சுன்னாகம் மயிலணி வடக்கில் புகையிரத நிலையத்து அருகில் அமைந்துள்ள அண்ணமகேஸ்வரர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று சனிக்கிழமை ஆரம்பமாகியது. பத்தாம் நாள் சித்திரா பூரண தீர்த்த திருவிழாவுடன் உற்சவம் நிறைவு பெறும். (இ)

★ ★ ★

கரவெட்டி வெல்லன் விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

ரதோற்சவம் இம்மாதம்21 ஆம் திகதியும் தீர்த்தோற்சவம் 22 ஆம் திகதியும் நடைபெறும். (இ-173)

★ ★ ★

கைதடி சைவச் சிறுவர் இல்லத்தில் எழுந்தருளி அருள்பாலிக்கும் சிவகாம சுந்தரி சமேத தில்லைநடராஜப் பெருமானுக்கு வருடப் பிறப்பை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு8.37 மணிக்கு விசேட பூசை வழிபாடுகள் நடைபெற இந்து சமாயட்பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ)

★ ★ ★

புத்தாண்டு பிறக்கும் நேரமான இன்று இரவு 8.37 மணிக்கு நல்லூர் கந்தசுவாமி கோயிலில் விசேட சண்முக தரிசனம் இடம்பெறவிருக்கின்றது. அதனைத் தொடர்ந்து ஆறுமுகசுவாமி உள்வீதி வலம் வருவார். இதேவேளை வருடப்பிறப்பு திருவிழா நாளை திங்கட்கிழமை வழமை போல் இடம் பெறும். (ஐ)

★ ★ ★

உரும்பிராய் வடக்கு பேய்ச்சியம்மன் ஆலயத்தில் புத்தாண்டு வழிபாடுகள் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகும்.

கூட்டு வழிபாட்டுடன் முற்பகல் 11 மணிக்கு பூசைகள் நிறைவு பெறும். (ஐ-154)

★ ★ ★

சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம் அம்பலவாணர் வீரகத்தி விநாயகர் ஆலய வருடார்ந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாள்கள் இடம்பெறும். (ஐ-15)

★ ★ ★

நல்லை ஆதீனத்தின் குரு முதல்வர் நல்லைக்குருமணி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் 16 ஆவது ஆண்டு குருபூசை தின ஆராதனை விழா இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணி முதல் ஆதீனத்தில் நடைபெறும். [ஐ-30]

★ ★ ★

சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகம்மாள் கோயில் வருடாந்த உற்சவம்இன்றுகாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10தினங்களுக்கு நடைபெறவுள்ளது. [ஐ-30]

★ ★ ★

கொழும்புத்துறை மேற்கு மன்றுளாடும் ஸ்ரீ விநாயகப் பெருமான், புங்கன்குளம் வீதி ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆகிய ஆலயங்களிலும்நாளை திங்கட்கிழமை காலை முதல் புத்தாண்டு பூசைகள் இடம் பெறவுள்ளன. [ஐ-30]

### நாளை

சித்திரை 1

திங்கட்கிழமை

திதி: ஸப்தமி

பிற்பகல் 1.24வரை.

நட்சத்திரம்: புநர்பூசம் முழுவதும்.

ஈசுர வருஷப் பிறப்பு

கைவிசேஷம்:

காலை 9.15—9.32

சுபநேரம்: 12.05-1.35

ராகுகாலம்: 7.35-9.05

(பகலுக்கும் இரவுக்கும் [illegible] நேரப்படி)

# கோட்டை முனீஸ்வரன் கோயிலில் நாளை முதல் பூசை வழிபாடு

## அடியார்கள் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம், ஏப். 13

யாழ். கோட்டை முனீஸ்வரன் கோயிலில் நாளை புத்தாண்டு தினம் முதல் மீண்டும் பூசை வழிபாடுகள் ஆரம்பமாகவுள்ளன. அன்றைய தினம் அங்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

ஆலயத்துக்கு அடியார்கள் செல்ல வசதியாக முனீஸ்வரன் வீதி நாளை முதல் திறந்து விடப்படவுள்ளது. இவ் வீதிவழியாக நாளையும் பின்னர் பிரதி வெள்ளிக்கிழமைகளில் மட்டும் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரையும் அடியார்கள் ஆலயத்துக்குச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

யாழ். நகரத் தளபதி பிரிகேடியர் ஜெயசுந்தர, சிரேஷ்ட பொலீஸ் சுப்பிரின்டன் லெவன்கம ஆகியோர் இதற்கான அனுமதியை வழங்கியிருப்பதாக ஆலய நிர்வாகம் தெரிவித்துள்ளது.

நகரில் உள்ள தமிழ் அமைப்புகள் எடுத்த முயற்சியின் விளைவாக ஆலயப் பகுதி, மக்கள் நடமாடக் கூடியதாகத் துப்புரவு செய்யப்பட்டிருக்கிறது. (ஐ)

# இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் மீள மன்னார் திரும்புகின்றனர்

கொழும்பு, ஏப். 13

மன்னார் நகரப் பகுதி வழமை நிலைமைக்குத் திரும்புவதை அடுத்து கடந்த காலங்களில் அங்கிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் மெல்ல மெல்ல நகருக்குத் திரும்பி தமது வீடுகள், கட்டடங்களைப் புனரமைக்கத் தொடங்கியுள்ளனர்.

மன்னாரிலிருந்து இடம் பெயர்ந்து வேறு இடங்களில் வேலைக்கு சமுகம் கொடுத்துக் கொண்டிருந்த அரச ஊழியர்களும் தற்போது மன்னாருக்குத் திரும்பத் தொடங்கியுள்ளனர்.

கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் இத்தகவலை வெளியிட்டன,

இதேசமயம் —

பேசாலைப் பகுதியில் பதற்றம் நிலவுவதாகவும், கடைகள் திடீர் திடீரென மூடப்படுவதாகவும் தெரிவிக்கப் பட்டது. (உ-3-150)

## அரசு- ஐ.தே.க. இருதரப்பினதும்

# மேதினக் கோஷம் "தேசிய ஐக்கியம்!"

கொழும்பு, ஏப். 13

அரசாங்கத்தினதும், ஐ.தே.க. வினதும் மேதினக்கோஷம் தேசிய ஐக்கியத்துடன் சம்பந்தப்பட்டதாக அமையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அரசாங்கத்தின் கோஷம் 'சமாதானமும் தேசிய ஐக்கியமும்'' என்றும் —

ஐ.தே.க. வின் கோஷம் ''தேசிய ஐக்கியம்'' என்றும் — அமையும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அரசாங்கத்தின் மேதினக் கூட்டம் கொழும்பிலும், ஐ. தே. க. வின் மே தினக் கூட்டம் ஹட்டனிலும் நடைபெறவிருக்கின்றன. [உ-3-150]

## அண்மையில் யாழ். வந்த

# 2 இந்தியப் பேராசிரியரும் 'றோ' அமைப்பினராம்!

## புலிகள் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 13

அண்மையில் யாழ்ப்பாணம் சென்று திரும்பிய இந்தியப் பேராசிரியர்கள் இருவரும் ''றோ'' அமைப்டைச் சேர்ந்தவர்கள் என்று விடுதலைப் புலிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் எஸ்.டி. முனியும், சென்னைப் பல்கலைக்கழகத்தின் தெற்கு, தென்கிழக்கு ஆசிய கற்கைகள் நிலையப் பணிப்பாளர் வி. சூரியநாராயணன் ஆகியோரே அண்மையில் யாழ். வந்து திரும்பியிருந்தனர்.

இவர்களையே இந்தியாவின் உளவுப் பிரிவான 'றோ' வின் ஏஜெண்டுகள் என புலிகள் குற்றம் சுமத்தியிருக்கின்றனர்.

வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் யாழ்ப்பாணம் செல்ல இதுவரை அனுமதிக்காத இலங்கை அரசு, இவர்களை யாழ்ப்பாணம் செல்ல அனுமதித்தது ஏன்? — என்றும் புலிகள் கேள்வி எழுப்பியுள்ளனர். (உ-3-150)

# பாவனைத் திகதி காலாவதியான இனிப்பு - பிஸ்கெட் வகைகள்

## குடாநாட்டில் விற்பனை

திருநெல்வேலி, ஏப்.13

திகதி காலாவதியான இனிப்பு வகைகள் மற்றும் பிஸ்கெட் வகைகள் கடைகளில் விற்கப்பட்டு வருவதாகவும்-

இவற்றை வாங்கும் பொதுமக்கள் காலாவதியாகும் திகதியை கவனித்து சரிபார்த்து வாங்க வேண்டும் என்றும்- சுகாதாரப் பகுதியினர் எச்சரிக்கை செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் யாழ். நகரிலுள்ள கடை ஒன்றில் யாழ். பிராந்திய சுகாதார சேவை பதில் பிரதிப் பணிப்பாளர் ''குளுக்கோரச' பைக்கட் ஒன்றை வாங்கினார்.

அவர் அதனை வீட்டுக்கு கொண்டு சென்று பார்வையிட்டபோது அதில் பொறிக்கப்பட்ட திகதி காலாவதியாகி இருக்கக் காணப்பட்டது.

'குளுக்கோரச' வும் பூஞ்சனம் பிடித்து பழுதடைந்த நிலையில் காணப்பட்டது.

காலாவதியாகும் திகதி கடந்த மார்ச் 15 ஆம் திகதி என்று அதில் பொறிக்கப்பட்டிருந்தது.

எனவே இவற்றை வாங்குபவர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (இ-135)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# காங்கிரஸ் கட்சிக்குள் கேசரி மீது அதிருப்தி!

புதுடில்லி, ஏப். 13

இந்தியாவில் தேவகௌடா தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசுக்கு வழங்கி வந்த ஆதரவை திடீரென விலக்கிக் கொண்டு அந்த ஆட்சியைக் கவிழ்த்த காங்கிரஸ் கட்சிக்குள் இப்போது பெரும் அதிருப்தி நிலை ஏற்பட்டிருப்பதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆட்சிக் கவிழ்ப்பு மூலம் காங்கிரஸ் சந்தர்ப்பவாதக் கட்சி என தன்னை நிரூபித்துள்ளது என்று கடும் கண்டனம் தற்போது எழுந்துள்ளது.

விளைவுகளைக் கருத்தில் கொள்ளாமல் — ஜனநாயக முறைப்படி கட்சியின்ஏனைய மட்டத்தினரின் கருத்தைக் கேளாமல் — அவசரப்பட்டு — தன்னிச்சையாக — முடிவு எடுத்து கட்சித் தலைவர் சீதாராம் கேசரி செயற்பட்டிருக்கின்றார் என்றும் —

அதன் மூலம் கட்சி நீக்க முடியாத அவப்பெயரைச் சம்பாதித்துக் கொண்டுள்ளது என்றும் —

கட்சி எம். பிக்களில் கணிசமானோர் கோபமுற்றிருப்பதாகக் கூறப்படுகின்றது.

கட்சித் தலைவரின் போக்கில் அதிருப்தியுற்றுள்ள சுமார் ஐம்பதுக்கும் அதிகமான எம். பிக்கள் தமது நாடாளுமன்றக் குழுத் தலைவர் சரத் பவாரின் வீட்டில் நேற்றுக் கூடினர். சீதாராம் கேசரிக்கு எதிராக கடுமையான சொற் பிரயோகங்கள் அடங்கிய உரைகளை அவர்கள் அங்கு நிகழ்த்தினார்கள். தமது முடிவுக்கான காரணங்களை விளக்குவதற்காக கட்சியின் செயற்குழுக் கூட்டத்தை சீதாராம் கேசரி உடன் கூட்ட வேண்டும் என்றும் அவர்கள் வற்புறுத்தினர்.

தற்போதைய நிலையில் காங்கிரஸ் கட்சிக்குள் சீதாராம் கேசரிக்கு மாற்றாக வரக் கூடிய ஒரே தலைவர் சரத் பவார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

வார்கள்.

''ஒவ்வொரு நாடும் தமது நாட்டில் புலிகள் நிதி திரட்டுவதற்கான வாய்ப்பைத் தடை செய்தால் இப்பிரச்சினைக்கு சுமுகமாகத் தீர்வு காணமுடியும்'' — இவ்வாறு அவர் அங்கு மேலும் தெரிவித்தார். (உ-5)

## காணாமற்...

(முதலாம் பக்கத் தொடர்)

னார்.

மனித உரிமை மீறல்களுக்காகப் விடுதலைப் புலிகள் அமைப்பு மீதும் அவர் குற்றம் சுமத்தினார்.

இலங்கை அரசுப் படைகள் குறித்து அமெரிக்க மனித உரிமைகள் அமைப்பின் தலைவர் கூறிய கருத்து ''மிகைப் படுத்தப்பட்ட ஒன்று'' என விமரிசித்தார் அந்த மாநாட்டில் கலந்துகொள்ளும் ஸ்ரீலங்காப் பிரதிநிதி பேர்னாட் குணதிலக.

'ஸ்ரீலங்கா அரசு கொண்டு வரவுள்ள உத்தேச அரசமைப்புத் திருத்தத்தில் மனித உரிமை பற்றிய விதிகள் உள்ளடக்கப்படவுள்ளன. இதன் மூலம் மனித உரிமைகள் ஸ்ரீலங்காவில் மேலும் உறுதிப்படுத்தப்படும்'' — என்றும் ஸ்ரீலங்கா அரசு சார்பில் அந்த மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

(உ-5-10)

## புலிகளுடன்...

(முதலாம் பக்கத் தொடர்)

றது.

ஆனால் லியம் பொக்ஸ் புலிகளுடன் எதுவிததொடர்புகளையும் மேற்கொள்ள வில்லை — என்றும் பிரிட்டிஷ் தூதரகம் தெரிவித்துள்ளது.

லியம் பொக்ஸின் முயற்சி பொதுமக்கள் ஐக்கிய முன்னணியுடனும் ஐ.தே.கவுடனும் பேச்சுவார்த்தை நடத்துவதாக மாத்திரமே அமைந்திருந்தது.

இந்த விடயம் குறித்து லியம் பொக்ஸோ, பிரிட்டிஷ் அரசாங்கமோ புலிகள் இயக்கத்துடன் எதுவித பேச்சுவார்த்தையையும் நடத்தவில்லை —

இவ்வாறு தூதரகம் மேலும் குறிப்பிட்டது. (உ-5)

## விமானப்படைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

அதிகாரி ஒருவர் மறுத்துள்ளார்.

வழமையாக நடக்கும் கடற்கொள்ளைச் சம்பவம்தான் இது என்று அவர் கூறினார்.

கொழும்புத் துறைமுகத்தில் கடற்கொள்ளை தொடர்பாக மாதத்தில் இரண்டு அல்லது மூன்று முறைப்பாடுகள் தமக்குக் கிடைப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

(ஐ-3-150)

## இந்தியாவில் விமான சேவை வழமைக்கு

புதுடில்லி, ஏப். 13

இந்திய விமான சேவை நிர்வாகத்தினால் சக ஊழியர் ஒருவர் வேலை நீக்கம் செய்யப்பட்டதை ஆட்சேபித்து நடத்தப்பட்ட விமானக் கட்டுப்பாட்டு அதிகாரிகள் வேலை நிறுத்தம் நேற்று முடிவுக்கு வந்தது. நிர்வாகத்துடன் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட உடன்பாட்டை அடுத்தே இந்த வேலை நிறுத்தம் கைவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்) (ஐ-10)

## நகரில் புத்தாண்டு கலகலப்பு

யாழ்ப்பாணம், ஏப். 13

தமிழ்-சிங்கள புத்தாண்டை ஒட்டி யாழ். நகரில் கடந்த சில தினங்களாக வியாபாரம் களைகட்டியிருக்கிறது.

கடைகளிலும் நடைபாதைகளிலும் புடைவை வியாபாரம் சுறுசுறுப்பாக நடைபெறுகிறது.

பொருள்களை வாங்குவதற்காக பெரும் எண்ணிக்கையான மக்கள் நகரில் கூடுகின்றனர்.

சனக் கூட்டம் காரணமாக சில இடங்களில் போக்குவரத்து நெருக்கடியும் காணப்பட்டது. (ஐ-15-173)

## குண்டு வெடிப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்)

வீட்டுக்குள் கிடந்த இனம் தெரியாத பொருள் எதனையும் சிறுவன் வெளியே எடுத்து வந்து கையாண்டிருக்கக் கூடும் எனவும் —

அயலவர்கள் சிலர் குறிப்பிட்டனர்.

ஆனால் —

வீட்டில் இருந்த மீன் தொட்டியைத் துப்புரவு செய்த சிறுவன், தொட்டியிலிருந்த நீரை நிலத்தில் ஊற்றிய போது மண்ணுக்குள் ஏதோ பொருள தென்பட்டதாகவும் —

அதனை அவன் இழுக்க முற்பட்ட போது அது வெடித்ததாகவும் —

வேறு சிலர் தெரிவித்தனர்.

குண்டு வெடிப்பை அடுத்து சிறுவனின் உடல் துண்டு துண்டாகச் சிதறிக் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்திய யாழ். பொலீஸார், துண்டு துண்டாகச் சிதறிக் கிடந்த சிறுவனின் உடல் பாகங்களைப் பொறுக்கி, பொலித்தீன் பையில் சுட்டி யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைத்தனர் விசாரணையின் பொருட்டு உடல் பாகங்கள் யாழ், ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. [உ-15]

## புத்தாண்டு கலை விழா

தமிழ்- சிங்கள புத்தாண்டு தினத்தையொட்டி வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்தினர் புத்தாண்டு கலை விழா நிகழ்ச்சியினை ஒழுங்கு செய்துள்ளனர்.

புத்தாண்டு தினமாகிய நாளை திங்கட்கிழமை காலை பத்துமணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் உடுவில் பிரதேச செயலர் திரு. ஆ. மகாலிங்கம் தலைமையில் விழா நடைபெறும்.

மேலதிக அரசாங்க அதிபர் திரு. க. சண்முகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

யாழ்ப்பாண பல்கலைக் கழக இராமநாதன் நுண் கலை கழகம், யூனியன் கல்லூரி, மகாஜனாக் கல்லூரி ஆகியவற்றை சேர்ந்த மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் விழாவில் இடம்பெறும்.


# யா/ இந்து மகளிர் கல்லூரி

## முறைசாராக் கல்விப் பிரிவு

## தொழிற்திறன் பயிற்சிகள் - 1997

1. சிகையலங்காரம்
2. சமையற்கலை

கல்வித் தகைமை :- ஆண்டு - 11 சித்தி

விண்ணப்ப முடிவு திகதி :- 1997 - 04 - 24

விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

(9516) -அதிபர்


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13-04-1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

★ இருதரப்பையும் ஆதரிப்பதில்லை

## ஐக்கிய முன்னணி உறுதியான நிலைப்பாடு

புதுடில்லி, ஏப். 13

காங்கிரஸ் கட்சியோ அல்லது பாரதீய ஜனதாக் கட்சியோ ஆட்சி அமைப்பதற்கு ஆதரவளிப்பதில்லை என்று ஐக்கிய முன்னணி நேற்று திட்டவட்டமாக முடிவு செய்தது.

ஐக்கிய முன்னணியின் வழிகாட்டுக் குழுக் கூட்டம் நேற்றுக் காலை நடந்த போது இவ்வாறு தீர்மானிக்ககப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

அனேகமாக ஐக்கிய முன்னணியில் இடம்பெற்றுள்ள அனைத்துக் கட்சிகளினதும் தலைவர்கள் இக்கூட்டத்தில் பங்குபற்றினார். அவர்கள் அனைவரும் ஏகமானதாக இம்முடிவை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது,

இக்கூட்டம் குறித்து ஜனதா தளத்தின் தலைவர் லல்லு பிரசாத் யாதவ் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தார்.

''முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு ஐக்கிய முன்னணி மிகவும் ஐக்கியமாக உள்ளது. மிக இறுக்கமாகவும். கட்டுப்பாடுடனும், ஒருமித்த குரலிலும் செயற்படுவதில் முன்னணி தீவிரமாக உள்ளது,'

''முன்னணியின் தலைமையை மாற்றுவது என்ற பேச்சுக்கே இடமில்லை.

''அதேவேளை காங்கிரஸ் கட்சியோ அல்லது பாரதீய ஜனதாக் கட்சியோ மத்தியில் ஆட்சி அமைக்க ஆதரவளிப்பதில்லை என்பதிலும் ஐக்கிய முன்னணி விடாப்பிடியாக உள்ளது'' — இவ்வாறு அவர் கூறினார்.

ஐக்கிய முன்னணி இந்த நிலைப்பாட்டில் தீவிரமாக இருந்தால் தற்போதைய இந்திய அரசியல் நெருக்கடியை தீர்ப்பதற்குஒன்றில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு புதிய தேர்தல் நடத்தப்படவேண்டும். அல்லது காங்கிரஸ் கட்சி தனது முன்னைய நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு தேவகௌடா அரசுக்கு ஆதரவளிக்க முன்வரவேண்டும் — என்று அவதானிகள் கருத்து வெளியிட்டனர். (உ)

## காங்கிரஸ் செயற்குழு கூட்டத்தில் அதிருப்தியாளர் கை ஓங்கலாம்?

புதுடில்லி, ஏப். 13

இந்திய தேசிய காங்கிரஸின் செயற்குழுக் கூட்டம் நாளை திங்கட்கிழமை நடைபெறவிருக்கிறது.

ஐக்கிய முன்னணி அரசு பதவி விலகியிருப்பதை அடுத்து எழுந்துள்ள நிலைமைகள் குறித்து ஆராய்ந்து அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து இக்கூட்டத்தில் முக்கிய முடிவு எடுக்கப்படும் என்று தெரிக்கப்படுகிறது.

ஐக்கிய முன்னணிக்கு வழங்கி வத்த ஆதரவை நிறுத்துவதென சீதாராம் கேசரி தன்னிச்சையாக முடிவு எடுத்தது குறித்து கட்சிக்குள் அதிருப்தி கிளம்பி உள்ள இத்தருணத்தில் கூட்டப்படும் நாளைய செயற்குழுக் கூட்டத்தில் சீதாராம் கேசரிக்கு எதிரான அதிருப்தியாளர்களின் கை ஓங்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. [ஐ]

## ஐக்கிய முன்னணி தலைமையை மாற்றினால் ஆதரவு தருவோம்

### கேசரி நேற்று அறிவிப்பு

புதுடில்லி, ஏப். 13

ஐக்கிய முன்னணி தனது தலைமையை மாற்றுவதற்கு முன்வந்தால் அதுதொடர்ந்து ந்து ஆட்சியமைப்பதற்கு காங்கிரஸ் கட்சி ஆதரவு வழங்கும்.

காங்கிரஸ் கட்சியின் தலைவர் சீதாராம் கேசரி நேற்று இவ்வாறு தெரிவித்தார்.

தமது வீட்டில் பிரசன்னமாகியிருந்த கட்சி எம். பிக்கள் மற்றும் எம்.எல். ஏக்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

பிரதமர்பதவியைப் பெறும் முயற்சியில் ஈடுபடும் எண்ணம் ஏதும் தமக்கு இல்லை என்றும்—

ஆனாலும் தேவகௌடாவுக்குப் பதிலாகப் புதிய தலைவர் ஒருவரைத் தெரிவு செய்ய ஐக்கிய முன்னணி இணங்குமானால் ஐக்கிய முன்னணி தொடர்ந்து ஆட்சியில் இருப்பதற்கு ஆதரவு தர காங்கிரஸ் தயாராக இருப்பதாகவும்—

சீதாராம் கேசரி கூறினார்.

தற்போதைய நிலையில் புதிய அரசு ஒன்றை அமைக்கும் முயற்சியிலும் தமது கட்சி ஈடுபடாது என்றும் அவர் சொன்னார்.

(முன்னர் வந்த செய்தி 3 ஆம் பக்கத்தில்) (உ)

## புத்தாண்டு வேளையில் புலிகள் தாக்கக்கூடுமாம்

கொழும்பு, ஏப். 13

புத்தாண்டு வேளையில் கொழும்பில் விடுதலைப்புலிகள் தாக்குதல்களை நடத்தக் கூடும் என்றும் எனவே பொதுமக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும் என்றும் கொழும்புப் பிராந்திய பிரதிப் பொலீஸ்மா அதிபர் டி. எம். ஜி. வி. திஸநாயக்க எச்சரித்திருக்கிறார்.

கடந்த வருடம் புத்தாண்டைக் கொண்டாடிக் கொண்டிருந்தவேளை விடுதலைப் புலிகள் கொழும்புத் துறைமுகத்தைத் தாக்க முயற்சி எடுத்திருந்தனர் என்பதை அவர் நினைவு படுத்தினார்.

விடுதலைப்புலிகளின் தாக்குதல்களை எதிர்பார்த்து நாடு முழுவதிலும் தீவிர பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ஐ-5)

## கச்சதீவு தொடர்பான ஆவணங்கள் அழிந்தன

கச்சதீவு தொடர்பாக இலங்கை அரசுக்கும், இந்திய அரசுக்கும் இடையில் உடன்பாடு ஏற்பட்ட சமயம் தமிழக அரசால்கச்சதீவு தொடர்பாக மத்திய அரசிடம் கையளிக்கப்பட்ட சில முக்கிய ஆவணங்கள் எரிந்து விட்டன என்று தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

தமிழக பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org